<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 122/2013

இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.3 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மகேஷ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியன் | கிராமம் | : எருக்கலாங்காட்டுபுதூர் |
| வயது | : 50 | தாலூக்கா | : காங்கேயம் |
| நாள் | : 17-04-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

நான் வழக்கின் 8 ம் பிரதிவாதியாவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.16 | 25.07.1863 | பெரும்பணை வரதராஜ பெருமாள் கோவில் ஸ்தாணிகர் சேஷையன் பெயரில் உள்ள T.D 130 – ன் இனாம் தூய பதிவேடு | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.17 | - | தாவாச் சொத்தின் பழைய க.ச.எண். 198 – க்கு புதிய க.ச.எண். 50 – ன் ஆர்.எஸ்.ஆர். பதிவேடு | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ,18 | - | சேஷ ஐயங்கார் பெயரில் T.D No. 130 – ல், கொடுக்கப்பட்ட இனாம் – அ – பதிவேடு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.19 | | வரதராஜ பெருமாள் பூஜாரி சேஷ ஐயங்கார் பெயரில் உள்ள இனாம் ஒழிப்பு சட்டத்திற்க்கு முன்பிருந்து கிராம கர்ணம் அவர்களால் பராமரிக்கப்படு வந்த T.D.No.130 – ல் அமைந்துள்ள தாவாச் சொத்தின் பட்டா/சிட்டா. | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.20 | 10.10.1972<br><br>19.06.1974 | கோயமுத்தூர் செட்டில்மெண்ட் தாசிதாரரால் 10.10.1972 – ம் தேதியில் **S.R. 221/1968** (பகுதி **II**) – ல் வழங்கப்பட்ட உத்தரவு.<br>**&**<br>கோயமுத்தூர் செட்டில்மெண்ட் தாசில்தாரரால் 19.06.1974 – ம் தேதியில் **R.R. 17/1972** – ல் வழங்கப்பட்ட உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.21 | | க.ச.எண். 50/2 – ல் கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்கார் பெயரில் உள்ள கிஸ்து இரசீதுகள் (எண்ணம் **6**). | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.22 | | க.ச.எண். 50/2 – ல் கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்கார் பெயரில் உள்ள கிஸ்து டிமாண்ட் பதிவேடு (எண்ணம் **16**). | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.23 | 13.05.2010 | அ – பதிவேட்டின் படிக்கு திருப்பூர், மண்டல துணை தாசில்தாரரால் கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காருக்கு 13.05.2010 – ம் தேதியில் ந.க.எண். **3750/2010** – ல் வழங்கப்பட்ட பட்டா எண். 9. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.24 | 13.07.1996 | கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.25 | 08.03.1998 | கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் வாரிசு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.26 | 29.07.2005 | இந்து சமய் அறநிலையத் துறை, திருப்பூரின் இணை ஆணையர் 29.07.2005 – ம் தேதியில் 3 – ம் பிரதிவாதி கோவிலின் டிரஸ்டியாக கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் மகன் எஸ்.ராதாகிருஷ்ணனை நியமனம் செய்த உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.27 | 10.08.2005 | 10.08.2005 – ம் தேதியில் பட்டாச்சர்யா/பூஜாரி கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் மகன் ராதாகிருஷ்ணனுக்கு 3 – ம் பிரதிவாதி கோவிலின் வங்கிக் கணக்கை செயல்படுத்த வழங்கப்பட்ட உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.28 | 04.08.2011 | கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் வாரிசுகளான 1.சரோஜா, 2.ஜெகதாம்பாள், 3.வரதராஜன், 4.சந்தானம், மற்றும் 5.பரிமளம் ஆகியோர் கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் மகன்களான 1.ஜெயபாலன், 2.ராதாகிருஷ்ணன் மற்றும் முத்துசாமி மகன் சக்திவேல் மற்றும் ராஜன் மகன் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | சிவா மற்றும் பெரியசாமி மகன் கோபாலுக்கு 04.08.2011 – ம் தேதியில் எழுதிக் கொடுத்த கிரைய ஆவண எண். **No.7460/2011**. | |
| பி.வா.சா.ஆ.29 | 26.03.2012 | 26.03.2012 – ம் தேதியில் மாவட்ட வருவாய் அதிகாரிக்கு இந்து சமய அறநிலையத்துறை, துணை ஆணையர் ந.க.எண். 1080 / 2010 – ல் கொடுத்த கடிதம். | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.30 | 18.04.2012 | 18.04.2012 – ம் தேதியில் கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் மகன் ஜெயபாலன் இந்து சமய அறநிலையத்துறை, துணை ஆணையருக்கு கொடுத்த பதில் கடிதம். | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.31 | 18.04.2012 | 18.04.2012 – ம் தேதியில் கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் மகன் ஜெயபாலன் சென்னை தெற்கு, நிலவரித் திட்ட துணை அலுவலருக்கு கொடுத்த மனு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.32 | 29.06.2012 | 29.06.2012 – ம் தேதிய ந.க.எண். **I 2/3579/2012** – ல் சென்னை தெற்கு நிலவரித் திட்ட உதவி அலுவலர் கொடுத்த செயல்முறை உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.33 | 27.08.2012 | 27.08.2012 – ம் தேதியில் திருப்பூர், தாசில்தாரர் அவர்களால் **Ref.No.6058/2012** – ல் கொடுக்கப்பட்ட நியாயவார குத்தகை உத்தரவு (Fixed the fair Rent Order). | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.34 | 31.10.2012 | 31.10.2012 – ம் தேதியில் கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் வாரிசுதாரர்களால் திருப்பூர், சார் கருவூலத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகை **Rs.9,07,164/–** திற்க்கான செலான். | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.35 | 13.02.2013 | 13.02.2013 – ம் தேதியில் சென்னை நிலவரித் திட்ட அலுவலரால் பெரும்பணை வரதராஜ பெருமாள் கோவில் நிர்வாக அதிகாரிக்கு **Na. Ka. No. E.1/502/2013** – ல் தெரிவிக்கப்பட்ட உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.36 | 05.02.2015 | 05.02.2015 – ம் தேதியில் ந.க.எண். 295 / 2015 – ல் திருப்பூர் மாவட்ட நில அளவை அலுவலக துணை இயக்குநர் வழங்கிய I.S.L.R – ந் செயல்முறை உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.37 | 23.12.2015 | கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் மகன் ராதாகிருஷ்ணன் கே.எஸ்.எஸ்.சுப்பைய ஐயங்காரின் மகன் ஜெயபாலனுக்கு 23.12.2015 – ம் தேதியில் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | ஆவண எண். **14208/2015**. | |
| பி.வா.சா.ஆ.38 | 01.07.2016 | கே.எஸ்.எஸ்.ஜெயபாலன் 01.07.2016 – ம் தேதியில் 7 – ம் பிரதிவாதி P.சுப்பிரமணியனுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவண எண். **8245/2016.** | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.39 | 15.09.2017 | **15.09.2017 –** ம் தேதியில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் **W.P. No. 5904/2014** – ல் வழங்கிய உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.40 | 31.10.2019 | 29.06.2012 – ம் தேதிய சென்னை தெற்கு நிலவரித் திட்ட உதவி அலுவலர் பிறப்பித்த ந.க.எண். 3579 / 2012 – ன் உத்தரவினை சென்னை நிலவரித் திட்ட அலுவலர் ந.க.எண். **I 2/1239/2008** – ன் மூலம் நீக்கரவு செய்ததற்க்கான உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.41 | 22.03.2019 | 8 மற்றும் 9 பிரதிவாதிகளான மகேஷ் மற்றும் மோகன்ராஜ் 22.03.2019 – ம் தேதியில் பெற்ற கிரைய ஆவண எண். **2263/2019**. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.42 | 20.04.2022 | **20.04.2022 –** ம் தேதியில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P. No. **7731/2022 –** ல் பிறப்பித்த உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.43 | 10.07.2023 | 10.07.2023 – ம் தேதியில் சென்னை தெற்கு நிலவரித் திட்ட உதவி செட்டில்மெண்ட் அலுவலரால் **CMA No.as 311/1969 and 429/1969** – எண்கள் சரியானது என திருத்தம் செய்யப்பட்ட உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.44 | 15.04.2025 | 15.04.2025 – **ம் தேதியில் மாண்பமை திருப்பூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில்** 7 **முதல்** 9 **பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட** CMA No. 3/2019 மேல்முறையீட்டு மனு மீதான உத்தரவு. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.45 | 17.12.2025 | 17.12.2025 – **ம் தேதியில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் S.T.A. No. 3/2025 – ல் தாக்கல் செய்யப்பட்ட C.M.P. No. 31923/2025 – மனுவில் வழங்கப்பட்ட உறுத்துக்கட்டளை உத்தரவு**. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.46 | 01.05.1913 | 01.05.1913 – ம் தேதியில் காளியப்ப கவுண்டரின் மகன்கள் 1.கருப்ப கவுண்டர், 2.கொண்டத்து கவுண்டர், 3.சின்னைய கவுண்டர் மாற்றும் 4 நாச்சியப்ப கவுண்டர் ஆகியோர் குட்டியப்ப கவுண்டருக்கு எழுதிக் கொடுத்த குத்தகை | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | ஆவண எண். **868/1913**. | |
| பி.வா.சா.ஆ.47 | 20.01.1914 | 20.04.1914 – ம் தேதியில் காளியப்ப கவுண்டரின் மகன்கள் 1.கொண்டத்து கவுண்டர், 2.சின்னைய கவுண்டர் மாற்றும் 3.நாச்சியப்ப கவுண்டர் ஆகியோர் மைனர்.சுப்பிரம்ணீஒள முதலியார் மற்றும் மைனர்.வாசுதேவ முதலியார் ஆகியோர்களின் சார்பாக அவர்களுடைய பாதுகாவலர் ஆனந்தம்மாளுக்கு கொடுத்த அடைமானக் கடன் பத்திரம் எண். **746/1914**. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.48 | 11.11.1918 | 11.11.1918 – ம் தேதியில் காளியப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டர் செல்லப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டருக்கு எழுதிக் கொடுத்த குத்தகை ஆவண எண். **3093/1918.** | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.49 | 27.11.1926 | 27.11.1926 – ம் தேதியில் காளியப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டர் அவருடைய மைனர் மகன் சின்னசாமி கவுண்டருடன் சேர்ந்து சோமசுந்தர செட்டியாருக்கு எழுதிக் கொடுத்த அடைமான கடன் ஆவண எண். **1726/1926**. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.50 | 15.05.1929 | 15.05.1929 – ம் தேதியில் காளியப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டர் ஷையாரின் மகன் சின்னப்ப கவுண்டர் இருவரும் சேர்ந்து மீனாட்ஷி சுந்தர விலாஸ் பைனான்ஸ் லிமிட்டெட், திருப்பூர் நிறுவனத்திற்க்கு எழுதிக் கொடுத்த அடைமானக் கடன் ஆவண எண். **528/1929.** | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.51 | – | காளியப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டர் ஷையாரின் மகன்கள் 1.சின்னியப்ப கவுண்டர் மற்றும் 2.சின்னியப்ப மகன் மைனர்.சின்னப்பன் என்கின்ற சரவண பவன் மற்றும் 3.சின்னியப்ப மகன் மைனர்.சின்னப்பன் என்ற கருப்பசாமி ஆகியோர் அசைமானம் செய்து கொடுத்த சொத்தை மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண் அ.வ.எண். 441/1938 – ல் தாக்கல் செய்யப்பட்ட நி.வே.மனு எண். 210 / 1940 – ல் விடப்பட்ட ஏலத்தில் கல்யாண சுந்தரம் எடுத்த ஏலத்திற்க்கு கொடுத்த கிரைய சான்றிதழ் எண். 161 / 1940. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.52 | 14.09.1942 | 14.09.1942 – ம் தேதியில் சோமசுந்தர செட்டியார் மகன் கல்யாண சுந்தரம் சின்னசாமி கவுண்டர் மனைவி நஞ்சம்மாளுக்கு எழுதிக் கொடுத்த | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | கிரைய ஆவண எண். **4562/1942**. | |
| பி.வா.சா.ஆ.53 | 25.08.1948 | 25.08.1948 – ம் தேதியில் 1.காளியப்ப கவுண்டர் மகன்கள் கருப்ப கவுண்டர் என்ற நாராயணசாமி கவுண்டர், 2.சின்னைய கவுண்டர், 3.சின்னைய கவுண்டர் மனைவி நஞ்சம்மாள் மற்றும் 4.சின்னநாச்சிமுத்து கவுண்டர் மகன் ராமசாமி கவுண்டர், 5.கருப்ப கவுண்டர் என்ற நாராயணசாமி கவுண்டர் மகன் கொண்டத்து கவுண்டர், மற்றும் கருப்ப கவுண்டர் மனைவி அம்மக்காள் ஆகியோர் எழுதி வைத்துக் கொண்ட பாகப்பிரிவினை ஆவண எண். **1737/1948.** | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.54 | 30.12.2016 | 01.01.1865 – ம் தேதி முதல் 31.12.1869 – ம் தேதி வரையிலான பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 26921/2016 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.55 | 10.07.2017 | 01.01.1872 – ம் தேதி முதல் 31.12.1875 – ம் தேதி வரையிலான பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 1195/2017 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.56 | 30.12.2016 | 01.01.1875 – ம் தேதி முதல் 31.12.1879 – ம் தேதி வரையிலான பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 26923/2016 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.57 | 30.12.2016 | 01.01.1880 – ம் தேதி முதல் 31.12.1884 – ம் தேதி வரையிலான பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 26924/2016 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.58 | 30.12.2016 | 01.01.1885 – ம் தேதி முதல் 31.12.1889 – ம் தேதி வரையிலான பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 26925/2016 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.59 | 30.12.2016 | 01.01.1890 – ம் தேதி முதல் 31.12.1894 – ம் தேதி வரையிலான பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 26926/2016 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.60 | 30.12.2016 | 01.01.1895 – ம் தேதி முதல் 31.12.1898 – ம் தேதி | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | வரையிலான பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 26927/2016 | |
| பி.வா.சா.ஆ.61 | 28.05.2013 | 01.07.1893 – ம் தேதி முதல் 31.12.1899 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 2 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 5800/2013 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.62 | 03.06.2013 | 01.01.1900 – ம் தேதி முதல் 31.12.1909 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 2 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 5956/2013. | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.63 | 03.06.2013 | 01.01.1910 – ம் தேதி முதல் 31.12.1919 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 2 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 5955/2013 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.64 | 03.06.2013 | 01.01.1920 – ம் தேதி முதல் 31.12.1929 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 2 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 5954/2013 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.65 | 03.06.2013 | 01.01.1930 – ம் தேதி முதல் 31.12.1939 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 2 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 5953/2013 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.66 | 03.06.2013 | 01.01.1940 – ம் தேதி முதல் 31.12.1949 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 2 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 5952/2013 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.67 | 03.06.2013 | 01.01.1950 – ம் தேதி முதல் 31.12.1959 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 2 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 5951/2013 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.68 | 29.05.2013 | 01.01.1960 – ம் தேதி முதல் 31.07.1973 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 2 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 5799/2013 | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.69 | 29.12.2011 | 01.08.1973 – ம் தேதி முதல் 31.12.1986 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 1 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 18395/2011 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.70 | 22.06.2012 | 01.01.1987 – ம் தேதி முதல் 21.06.2012 – ம் தேதி வரையிலான திருப்பூர் இணை நீர் 1 சார்பதிவாளர் அலுவலகத்திய வில்லங்க சான்றிதழ் எண். 9086/2012 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.71 | 07.02.2026 | 01.06.2012 – ம் தேதி முதல் 06.02.2026 – ம் தேதி வரையிலான தாவாச் சொத்தின் கணினி வில்லங்கச் சான்றிதழ் | சான்றிட்ட நகல் |

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆங்கிலம் எனக்கு படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். பி.வா.சா.ஆ.16 ல் கண்ட ஸ்தானிகர் என்பதற்கு என்ன அர்த்தம் என்றால் கோவிலை நிர்வாகம் பண்ணுபவர் என்று அர்த்தம். சேஷய்யர் கோவில் நிர்வாகி என்றால் சரிதான். கோவில் அங்கு இருந்தால் மட்டுமே சேஷய்யர் அங்கு வருவார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.17 ல் பெரும்பணை வரதராஜர் பெருமாள் என்று கண்டு அடுத்த பட்டியலில் சேஷய்யர் ஸ்தானிகர் என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.17 ல் 12 ம் பட்டியலில் பட்டாதார் பெயரும் நெம்பரும் உள்ளது என்றால் சரிதான். 18 ம் பட்டியலில் ஷரா என்று உள்ளதில் ஸ்தானிகர் பெயர் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.19 ல் வரிசை எண் 130 (தேவதாயம்) பூசாரி சேஷ அய்யங்கார் என்று உள்ளது. பெரும்பணை வரதராஜ பெருமாள் என்பதற்கு பெ வரதராஜ பெருமாள் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். சேஷ அய்யங்கார் பூஜை செய்யும் நபர் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.19 ஆவணம் எப்போது வாங்கப்பட்டது என்றால் 2017 ல் என் தந்தை நகல் போட்டு வாங்கினார். அதற்கு அடையாளம் உண்டா என்றால் இல்லை.

3. பி.வா.சா.ஆ.20 ஆவணத்தை நான் படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். அதில் சேஷ அய்யங்கார், சுப்பையா அய்யங்கார் பெயர் வந்துள்ளதா முதல் இரண்டு பக்கத்தில் இல்லை. பின்வரும் பக்கங்களில் உள்ளது. பி.வா.சா.ஆ.20 புல எண் 50/2 பெரும்பணை வரதராஜபெருமாள் கோவில் பூசாரி சுப்பையா அய்யங்கார் பெயரில்

உள்ள பட்டா ரத்து செய்யப்பட்ட ஆவணம் என்றால் இல்லை. அந்த ஆவணத்திலேயே 8(2)(2) பட்டா ரத்து செய்யப்பட்டு, ஷை புல எண் 50/2 ல் 5.63 ஏக்கர் பூமி சுப்பையா அய்யங்கார் பூமிக்கு 8(2)(1)(ஏ)ன்படி பட்டா வழங்கப்படுகிறது. 5.63 ஏக்கருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழங்கப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் 5.63 ஏக்கர் இல்லை என்றால் சரியல்ல.

4. பி.வா.சா.ஆ.21ல் உள்ள 3 வரிசை எண்களில் திருப்பூர் அருள்மிகு பெரும்பணை வரதராஜ பெருமாள் கோவிலின் தற்கால பூசாரி சுப்பையா அய்யங்கார் என கண்டுள்ளது என்றால் சரிதான். 4 வது வரிசையில் சுப்பையா அய்யங்கார் கோவில் வழி என கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.22ல் உள்ள 5 வது வரிசை எண்ணில் கோவில் பெயரும் சுப்பைய அய்யங்கார் பெயரும் இல்லை என்றால் 4 வரிசை எண்களில் சுப்பைய அயயங்கார் பெயர் உள்ளது. அதில் ஜெயபாலன் பெயர் உள்ளது என்றால் சரிதான். அவர் சுப்பையா அய்யங்காரின் மகன் ஆவார்.

5. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.22ல் 6 வது வரிசை ஆவணம் என்ன ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.22 சாகுபடி கணக்கில் சுப்பைய அய்யங்கார் பெயர் மட்டும் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.26 தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கோரப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் கோவில் அறங்காவலராக சுப்பையா அய்யங்கார் மகனை நியமனம் செய்த ஆவணம் என்றால் சரிதான். அறங்காவலர் பதவி என்பது அந்தந்த ஆட்சிக்காலத்தின்போது அந்தந்த கட்சிக்காரருக்கு கொடுக்கும் பதவி என்றால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் ராதாகிருஷ்ணனுக்கு அறங்காவலர், பூசாரி பதவி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. அந்த ஆவணத்தில் பூசாரி என்ற வார்த்தை இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.27 ஆவணத்திலும் ராதாகிருஷ்ணன் பூசாரியாகவும் அறங்காவலராகவும் நியமிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.27க்கு மறு உத்தரவு எப்போது வந்தது என்றால் தெரியாது. முத்துச்சாமி மகன் சக்திவேல் யார் என்றால் சுப்பையா அய்யங்காரின் வாரிசுகளிடம் கிரயம் பெற்ற நபர் ஆவார். பி.வா.சா.ஆ.29ல் முத்தணம்பாளையம் கிராமத்தில் உள்ள கோவில்களின் பூமி குறித்த பட்டியல் என்றால் T.D.130 குறித்த பட்டியலாகும்.

7. பி.வா.சா.ஆ.29ல் பொருள் என்ற இடத்தில் போலி ஆவணங்கள் மூலம் கோவில் நிலங்களுக்கு தனியார் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது முத்தனம்பாளையம்

கிராமம் சர்வே எண் 50/2 –2.28.00 ஹெக்டேர் நிலம் சம்பந்தமாக – அருள்மிகு பெரும்பணை வரதராஜ பெருமாள் கோவில் கோவில் வழி என்று கண்டுள்ளது என்றால் அதனுடைய மற்ற விளக்கங்கள் அந்த ஆவணத்தின் அடுத்த பக்கத்தில் கண்டுள்ளது. பி.வா.சா.ஆ.29 ல் அரசு அதிகாரிகளின் சுருக்கொப்பம் இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் இந்து அறநிலையத்துறையில் இருந்து சான்றிட்ட நகலாக கொடுக்கப்பட்டது. இந்து அறநிலையத்துறையில் இருந்து covering letter மட்டும் தான் வந்தது, மற்ற ஆவணங்கள் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ.30 ஆவணத்தின் covering letter மட்டும் உண்மையானது, மற்ற ஆவணங்கள் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.31 ல் 67 பக்கங்கள் இணைத்து அனுப்பப்பட்டதாக covering letter ல் கண்டுள்ளது என்றால் சரிதான். தேவைப்பட்டால் மற்ற ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளோம். பி.வா.சா.ஆ.31 ல் யார் அனுப்பினார்கள் என்ற கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.32 ல் செட்டில்மெண்ட் தாசில்தார், கோபி 7.10.1968 ல் வழங்கிய உத்தரவில் க.ச.எண்.50/2 ல் 5.63 ஏக்கருக்கு பெரும்பணை வரதாராஜ பெருமாள் திருக்கோவில், கோவில் வழி (rep by Poosari for time being K.S.S.Subbia Iyyengar) என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

9. பி.வா.சா.ஆ.34 ஜெராக்ஸ் நகல் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.35 ல் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.36 ஜெராக்ஸ் நகல் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.38 ல் கண்ட 5.63 ஏக்கர் சொத்து பிரிக்கப்படாத சொத்து என்றால் சரிதான். ஜெயபாலன் பெற்ற உத்தரவுக்கு எதிராக கோவில் சென்னை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதி பேராணை மனு எண் 5904/2014 தாக்கல் செய்த மனு தேதி 15.09.2017 அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.40 ஆவணம் உதவி நிலவரி திட்ட அலுவலர் போட்ட உத்தரவை ரத்து செய்தது என்றால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ.42 கண்டுள்ள வழக்கு எதற்காக போடப்பட்டது என்றால் 1974 ம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டா ஆர்.ஆர். 17/1972 விசாரணை கோப்பின் முழு நகல் வேண்டி தொடர்ப்பட்ட வழக்கு ஆகும். பி.வா.சா.ஆ.44 ஆவணம் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஒரு பரிகாரம் வழங்கப்பட்டு, ஒரு பரிகாரம் பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டது. நான் கோரிய 2 பரிகாரமும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் அனுமதிக்கப்பட்டது என்றால்

சென்னை தெற்கு நிலவரி உதவி திட்ட அலுவலர் ந.க.எண்.3579/2012 நாள் 29.06.2012 புல எண் 50/2க்கு நியாயபார குத்தகை தொகை வட்டியுடன் செலுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அனுமதிக்கப்பட்டது. சி.எம்.ஏ. மனுவின் உத்தரவுக்கு எதிராக சென்னை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளேன் என்றால் சரிதான்.

11. பி.வா.சா.ஆ.47ல் அடமானப் பத்திரம் என்றால் சரிதான். சொத்தின் உரிமையாளர் தான் அடமானம் ஏற்படுத்த முடியும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.54 முதல் 71 வரையிலான வில்லங்க சான்றிதழ்கள் அனைத்தும் சொத்துக்கு உரிமையில்லாத நபர்கள் ஏற்படுத்திக் கொண்டது என்றால் சரியல்ல. 1968 மற்றும் 1974ம் ஆண்டுக்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சொத்தின் உரிமையாளர்கள் ஏற்படுத்திக் கொடுத்த ஆவணங்களாகும். தாவாச் சொத்து பெரும்பணை வரதராஜ பெருமாள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது, அந்த சொத்துக்களை அனுபவம் செய்ய மட்டும் தான் அவர்களுக்கு உரிமை உள்ளது, சொத்தை விற்பனை செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல.

12. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். தாவாச் சொத்தை என்ன விலைக்கு வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.41 ல் கொடுக்கப்பட்ட தொகைகளின் வங்கி கணக்கு எடுத்தால் ஆவணத்தில் கண்படி தொகை கொடுக்கப்பட்டதா, அல்லது பெயரளவில் ஏற்படுத்தப்பட்டா என்பது தெரியும் என்றால் தெரியும். பி.வா.சா.ஆ.41 ஏற்பட்டபோதே தாவா நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் கிரயம் வாங்கிய பின்பு நான் எடுத்தவை மற்றும் அதற்கு முன்பு உள்ள ஆவணங்கள் கிரயம் எழுதிக் கொடுத்தவர்கள் எனக்கு கொடுத்த ஆவணங்களாகும்.

13. க.ச.50/2ல் உள்ள ஒரு சொத்தில் உரிமை உள்ளதாக தாவா தாக்கல் செய்த விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லி உள்ளதை படித்துப் பார்த்தேன் என்றால் சரிதான். க.ச.எண்.50/2 நெ. காலையின் சொத்தின் ஒரு பகுதியை பழனிச்சாமி என்பவர் இந்நீதிமன்றததில் சொத்து தனக்கு பாத்தியம் என விளம்புகை பரிகாரம் கோரி அ.வ.எண்.134/2013ல் கோப்புக்கு எடுக்கப்பட்டு முழுவிசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடியான விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. அந்த தீர்ப்புக்கு எதிராக சார்பு நீதிமன்றம் திருப்பூரில் தாக்கல் செய்த மே.மு.எண்.4/2022 என கோப்புக்கு எடுக்கப்பட்டு முழு விசாரணக்கு பிறகு தள்ளுபடியான விவரம் கூடுதல் எதிர்வழக்குரையில் கூறி இருந்தும் அதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவாச் சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது, அதை அனுபவம் செய்ய மட்டுமே ஸ்தானிகர் மற்றும் தற்கால பூசாரி சுப்பையா அய்யங்காருக்கும் அவரது வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது, அதை விற்பனை செய்ய அவர்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

14. சுப்பையா அய்யங்காரின் பெண் மக்கள் எழுதிக் கொடுத்த விடுதலை ஆவணம் உரிமையில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. உரிமையில்லாத ராதாகிருஷ்ணன், ஜெயபாலன் ஆகியோரிடமிருந்து 7 முதல் 9 பிரதிவாதிகளான நாங்கள் கிரயம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை பொறுத்து சார்பு நீதிமன்றம் திருப்பூரில் சி.எம்.ஏ.3/2019 ல் நாங்கள் தரப்பினராக இருந்த அந்த வழக்கில் தோல்வியுற்ற பின்பு இந்த வழக்கில் எங்களை கட்சி சேர்க்க தவறான எண்ணத்துடன் மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

15. எதிர்கோரிக்கை மனு தாக்கல் செய்வதற்கு எந்த சொத்துக்கு உரிமை கோருகிறோமோ அந்த சொத்தின் மதிப்புக்கு தகுந்தவாறு நீதிமன்றக் கட்டணம் செலுத்தவேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த எதிர்கோரிக்கை மனுவை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் எனக்கு தெரியாது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.04.17 17:20:46 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.